DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C.No.304/2019**

**P.W.4**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : பழனிச்சாமி

Father Name : கந்தவேல்

VILLAGE :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.08.2024.

( 1, 2 எதிரிகள் ஆஜர்.)

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் காவல் துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். நான் சம்பவ சமயத்தில் செக்கானூரணி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது, 22.03.2016 ம் தேதி மதியம் 13.15 மணிக்கு தேர்தல் பணி சம்பந்தப்பட்ட பறக்கும்படையை சேர்ந்த சுருளிவேல் என்பவர் புகார் கொடுத்ததன் அடிப்படையில் சட்டப்பிரிவு 9 (B)(I)(b) Explosive Substance Act ன்படி வழக்கு பதிவு செய்து ஆய்வாளர் விசாரணைக்காக அவர் பார்வைக்கு வைத்தேன். நான் மேற்படி பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆவணங்களை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

<u>**1 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**</u>

புகாரை அ.சா–1 தான் எழுதிக்கொடுத்தார். அ.சா–1 புகார் கொடுக்கும் போது காவல் ஆய்வாளர் தேர்தல் பணியில் இருந்ததால் நான் நிலைய அதிகாரியாக

பொறுப்பில் இருந்தேன். அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையில் அ.சா.1 01.30 மணிக்கு நிலையத்தில் ஆஜரானதாக குறிப்பிட்டிருந்தால் அது தவறாகும். இந்த வழக்கில் நான் எந்தவொரு சாட்சியையும் விசாரிக்கவில்லை. அ.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கை காலம் –14 ல் அ.சா.1 யிடம் கையொப்பம் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். புகாரானது ஒரு நாள் காலதாமதமாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் அ.சா.1 நிலையத்தில் ஆஜராகி எந்த புகாரும் கொடுக்கிவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் எந்த முதல் தகவல் அறிக்கையும் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–**

1 வது எதிரி தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக 2 வது எதிரி தரப்பு வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை –** இல்லை.